[1977 ஆகஸ்டு 4

உதகை-சென்னை பேருந்து வழித்தடம்

* 15. வினு திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

உதகைக்கும் சென்னைக்கும் இடையே பேருந்துகள் விட அரசு முயற்சி ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. கே. உச்சி : உதகையிலிருந்து சென்னை மிகவும் தொலைவாக இருப்பதால், அங்குள்ள மக்கள் சென்னைக்கு நேரடியாக வரப்பிரியப்படுகிறார்கள். இப்போது முடியாது என்றாலும், பிறகு மறு பரிசிலனை செய்யப்படுமா என்று கூறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, உதகை மலைச் சாலையாகும். நீளம் 176 அங்குல 'சேசிஸ்' உள்ள வண்டிகள்தான் அங்கே போக முடியும். நம்மிடம் உள்ள வண்டிகள் 210 அங்குல சேசிஸ் ஆகும். எனவே, இந்த வண்டிகள் அங்கே போக முடியாது. இப்போது சேரன் போக்குவரத்துக் கழகம் குறைவான நீளமுள்ள 8 பேருந்துக்களை கோவையிலிருந்து உதகைக்கு விடுகிறார்கள். தவிர, கோவை—சென்னையின் தூரம் 579 கிலோ மீட்டர் ஆகும். சென்னையிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 10 தினமும் செல்கின்றன. அதேமாதிரி, கோவையிலிருந்து உதகைக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் அரை மணி நேரத்திற்கு ஒரு பேருந்தை விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, சென்னை —கோவை வழியாக உதகைக்குப் பேருந்துகள் விடுவதற்குக் கஷ்டமாக இருந்தாலும். இப்போது மைசூருக்கு விரைவுப் பேருந்துகள் செல்லுகின்றன. அதை எக்ஸ்டெண்ட் செய்து, குண்டல்பேட்டை வழியாக கூடலூர் மார்க்கமாக விடுவதற்கு ஏற்பாடு செய்தால் கூடலூர் மக்கள் பயனடைவார்கள். எனவே, அதைப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அது மலைச் சாலை என்று சொன்னேன். அங்கே நீளம் குறைவான 176 அங்குல சேசிஸ் உள்ள வண்டிகள் தான் செல்ல

1977 ஆகஸ்ட் 4]

முடியும். சென்னையிலிருந்து செல்கின்ற பேருந்துகள் அனைத்தும் 210 அங்குலம் நீளமுள்ள வண்டிகள் ஆகும். எனவே, குண்டல்பேட்டை வழியாக கூடலூருக்குச் செல்ல இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி—சென்னைக்கு துரிதப் போக்குவரத்து வண்டிகளை விடவேண்டுமென்று கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியங்கள், அங்குள்ள அதிகாரிகள், வியாபாரிகள் நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா ? அல்லது திருக்கோயிலூர், திருவண்ணாமலை, எல்.எஸ்.எஸ். விரைவு பஸ்கள் விஸ்தரிப்புச் செய்து கள்ளக்குறிச்சி வரை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உதகைக்கும், சென்னைக்கும் நேரடியாக பஸ்கள் விட முடியவில்லை என்றாலும், உதகையிலிருந்து கோவைக்கு வரக்கூடிய பிரயாணிகளுக்கு லிங்க் சர்வீஸ் ஏற்படுத்தி அவர்களுக்கு கோவையிலே ப்ரையாரிடி கொடுத்து, நேரே சென்னைக்கு வருவதற்கு அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அசோக் லேலண்டிலே செய்யப்படும் வைக்கிங் மாடல் பேருந்துகள் இதற்கு வசதியாக இருக்கும். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன்: உதகமண்டலம் போன்ற சுற்றுலா பயணிகள் செல்லுகின்ற இடத்திற்கு நிரந்தரமாகச் சென்னையிலிருந்து பஸ்களை விடமுடியாவிட்டாலும், வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அல்லது பருவ காலங்களில் சென்னையிலிருந்து பஸ்களை விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னையிலிருந்து ஊட்டி வரை நேரடியாகப் பேருந்துவிட உத்தேசம் இல்லை. மலைப் பகுதிகளில் குறைந்த நீளம் உள்ள வண்டிகளைத் தவிர வேறு பெரிய வண்டிகளை விட்டால் விபத்துக்கள் ஏற்படும் என்று கமிட்டி கூறிய காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை பரிசீலிக்கப் படமாட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: அவ்வாறு குறைந்த நீளம் உள்ள வண்டிகளைச் சென்னையிலிருந்து விட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குறைந்த நீளம் உள்ள வண்டிகளில் 32 பயணிகள்தான் செல்ல இயலும். 210" நீளமான வண்டிகளில் 44 பேர்கள் பயணம் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே, குறைந்த நீளமுள்ள வண்டிகளை விட்டால் நட்டத்தில் சென்றுவிடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை பரிசீலிக்கப்பட மாட்டாது என்று கூறுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் 210" வீல் பேஸ் வண்டிகள் மலைப் பகுதிகளில் செல்ல முடியாது. 176" வீல் பேஸ் வண்டிகள்தான் செல்ல முடியும் என்று சொன்னார்கள். இரண்டுக்கும் இடையே 190" வீல் பேஸ் வண்டிகள் இருக்கின்றன. அதை விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மலைப் பகுதிகளில் செல்லு வதற்கு 176" வீல் பேஸ் வண்டிகள்தான் ஏற்பன என்று கமிட்டி சிபாரிசு செய்த காரணத்தால் வேறு எந்த வண்டிகளையும் விட உத்தேசம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: பல்லவன் பஸ் முன்பு 'பல்லவா உன்னைத் தள்ளவா ?' என்ற அவப்பெயரைத் தனியார் துறை ரசிகர்கள் ஏற்படுத்தினார்கள். தற்சமயம் நானும் கனம் உறுப்பினர் உத்திர பதியும் சென்னைக்கு வரும்போது வண்டி நெய்வேலியில் ஸ்பேர் டயர் இல்லாத காரணத்தால் நின்றுவிட்டது. ஆகவே, அந்தப் பெயர் தவிர்க்கப்படும் முறையில் அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தனியார் துறையிலே குறைந்த நீளமுள்ள பஸ்களை விட்டு லாபத்தில்தான் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, நமது அரசு குறைந்த நீளமுள்ள பஸ்களை விடுவதன் மூலமாக நஷ்டம் ஏற்படும் என்று கூறுவது முறைதானா ?

1977 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தனியார் பஸ்கள் ஏதும் நீள வண்டி ஊட்டி வரை இப்போது செல்லவில்லை. தனியார் வண்டி ஒன்றுதான் இப்போது செல்லுகிறது. அந்த வண்டி குறைந்த நீள வண்டிதான். அதுவும் கோவையிலிருந்து ஊட்டி வரைதான் செல்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: மலைப்பாங்கான சாலையாக இருப்பதால் பெரிய பஸ் விடுவது சங்கடம் என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை சீசன் காலத்தில் சென்னையிலிருந்து ஊட்டிக்கு பஸ் போய்க் கொண்டிருந்தது. அந்த மாதிரி ஏற்பாடு ஏன் நிறுத்தப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 1975ஆம் ஆண்டு வரை பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள் சென்னையிலிருந்து ஊட்டி வரை சென்று கொண்டிருந்தன. மலைப் பகுதியில் நீள சேசிஸ் வண்டிகளை விடுவதால் விபத்துக்கள் உண்டான காரணத்தால் தனிக் கமிட்டி போட்டு கமிட்டியின் சிபாரிசின்படி இந்த முறை நிறுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்பு தீர்மானங்கள்

(அ) பாளையங்கோட்டை சதகதுல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையிலுள்ள, சதகத்துல்லா அப்பா கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததும், அதையொட்டி அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திருவாளர்கள் துரைமுருகன், சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, ச. சண்முகம், எம். ஏ. லத்தீப், ஏ. ஆர். மாரி